RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# குறிகூறும் மரபில் அகவன் மகளும் குறவஞ்சிக் குறத்தியும்

மு. நளினி [அ, *]

[அ] தமிழ்த்துறை, எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரி, கௌரிவாக்கம், சென்னை-600073, இந்தியா

# The Tradition of Fortune-Telling: Agavan Magal and Kuravanji Kurathi

**M. Nalini** [a, *]

[a] Department of Tamil, S.I.V.E.T. College, Gowrivakkam, Chennai-600073, India

* Corresponding Author:
dr.nalini.m@gmail.com

Received: 18-06-2025
Revised: 25-09-2025
Accepted: 01-10-2025
Published: 09-10-2025

**ABSTRACT**

From ancient times, the Tamil tradition has included the practice of seeking fortune through 'Kuri'. Tamils consulted fortune-tellers to understand the cause of unknown suffering and to foresee the outcome of impending wars. Women who foretold using the 'Kattu' method were called 'Agavan Magal', 'Kattuvichi', or 'Kodichi', while men using 'Kazhangu' were called 'Velan'. This paper examines the continuity and differences between the Sangam-era 'Agavan Magal' and the later-period 'Kuravanji Kurathi'. In Sangam literature, Agavan Magal placed paddy in a winnow, invoked deities, sang of mountain prosperity, and foretold. Her prediction that the heroine's physical changes were due to 'Muruganangu' caused great distress to the heroine and her friend, as recorded in Agam 98 and Kurunthogai 6. In contrast, the later Kuravanji Kurathi is portrayed as a positive thinker who instills hope, declaring "What you wish will happen". References in Maduraikanchi, Kurunthogai, Agananuru, and Natrinai show that kings rewarded Agavan Magalir, and both traditions used a 'Maaththirai Kol' (measuring staff). A key difference is that Agavan Magal is depicted as an elderly woman, while Kurathi is young. Thus, this paper establishes that the tradition of fortune-telling has evolved continuously from the Sangam age to the Kuravanji minor literary genre.

**Keywords:** Fortune-Telling, Agavan Magal, Kuravanji, Kattuvichi, Kodichi

## முன்னுரை

மிகப்பழங்காலந்தொட்டே தமிழ் மரபில் குறி கேட்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. காரணம் தெரியாத துன்பச்சூழலில் இத்துன்பம் வந்தது எவ்வாறு என்று அறியும் பொருட்டாகவும், போர் நடக்கவிருக்கும் காலத்தில் முடிவின் திறம் குறித்து அறியவும் தமிழர் குறிகேட்டு அறிந்துள்ளனர். கட்டு எனும் முறையில் குறி கூறும் பெண் அகவன் மகள் என்று அழைக்கப்பட்டுள்ளாள். கட்டுவிச்சி, கொடிச்சி என்று வேறு பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளாள். கழங்கு கொண்டு குறிகூறியவன் வேலன் என்று அழைக்கப்பட்டிருக்கிறான். இவர்கள் குறி கூறிய செய்தி தொல்காப்பிய நூற்பாவிலும், சங்க இலக்கியங்களிலும் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளன. பிற்காலத்தில் குறத்திப்பாட்டு என்ற சிற்றிலக்கிய வகையும், கலம்பகத்தின் ஓர் உறுப்பாகிய குறம் எனும் உறுப்பும் குறிகூறும் வழக்கத்தைக் காட்டுவன. குறத்திப்பாட்டில் குறம் என்ற கலம்பக உறுப்பையும் தழுவி இசைப்பாடல் கலந்து தோன்றியது குறம் எனும் பிரபஞ்சம். அதனைத்தொடர்ந்து நாடகப்பாங்கில் படைக்கப்பட்ட குறவஞ்சி எனும் சிற்றிலக்கியங்கள் இக்குறிகூறும் மரபைப் பறைசாற்றும்.

## கட்டும் கழங்கும்

கட்டு, கழங்கு என்னும் இரு முறைகளில் குறி கூறும் வழக்கம் பண்டை நாளில் இருந்துள்ளது. தலைவியின் உடல் மாறுபாடுகண்டு, அன்னை வருந்தி இதற்குக் காரணம் யாதென அறியும் பொருட்டு

அகவன்மகளை அழைத்துக் குறி கேட்பாள். முறத்தில் பிடி நெல்லையிட்டு தலைவியை எதிரே அமரவைத்து அகவன்மகள் தெய்வங்களை விளித்துப்பாடி மலைகளின் வளத்தைப் பாடி முறத்தில் உள்ள நெல்லை எண்ணிப்பார்த்து குறிசொல்வாள். இவ்வாறு அழைத்துப் பாடுதலான் அவள் அகவன்மகள் எனப்பட்டாள். தலைவியின் உடல்மாறுபாட்டுக்குக் காரணம் முருகணங்கு என்றோ பிரிதோர் அணங்கு என்றோ அவள் குறிகூறுவாள். பின்னர் அன்னை வேலனைக் கொண்டு வெளியாடல் நிகழ்த்தி கழங்கு மூலம் குறிகேட்பாள். கட்டின் மூலமாகவும் கழங்கின்மூலமகாவும் குறி கேட்ட செய்தியை

கட்டினும் கழங்கினும் வெறி என (தொல்.1065 : 3)

என்ற தொல்காப்பிய நூற்பா அடியால் அறியலாம்.

சேரியின் முதுபெண்டாகிக் குறி சொல்லும் மாதரை மனையகத்து கொணர்ந்து வைத்து முறத்திலே பிடிநெல்லையிட்டு எதிரே தலைமகளை நிறுத்தித் தெய்வத்துக்குப் பிரப்பிட்டு வழிபாடு செய்து அந்நெல்லை நந்நான்காக எண்ணி எஞ்சியவை ஒன்று இரண்டு மூன்றளவும் முருகணங்கு எனவும் நான்காயின் பிறிதொரு நோயெனவுங் கூறப்படுவது கட்டு என்றும் 'முருகணங்கு என்று கூறின் உடனே வேலனை (முருகனுக்குப் பூசை நடத்தும் பூசாரியை) அழைத்து வெறிக்களத்திற்கு முருகவேளுக்குச் சிறப்பெடுத்து ஆண்டுக் கழங்குக் குறிப்பார்ப்பது கழங்கு" என்றும் நற்றிணையில் (288) பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை கூறுவர்.

எதிர்கால நிகழ்வை முதலிலேயே அறிந்து கூறும்பொருட்டு கட்டுவிச்சியால் சிறிய முறத்தில் கொஞ்சம் நெல்லைப் பரப்பி வைத்துக்கொண்டு சொல்லப்படும் குறி கட்டுப்பார்த்தல் என்றும் பூசாரி ஆகிய வேலன் கழற்காய்களை வைத்துக்கொண்டு சொல்கின்ற குறி கழங்கு என்றும் தொல்காப்பிய அகராதி பொருள் கூறுகிறது.

முறத்தில் நெல்லை வைத்து தெய்வங்களைப்பாடி எண்ணிப் பார்த்து கட்டுவிச்சி காணும் குறி என்பார் உ.வே.சா. (குறுந்தொகை - 23)

'நன்னுதல் பரந்த பசலை கண்டு அன்னை

செம்முது பெண்டிரொடு நெல்முன் நீறீஇக்

கட்டில் கேட்கும்" - ( நற் - 288)

முதுவாய்க்

பொய்வல் பெண்டிர் பிரப்பிலிர் பிரீஇ

முருகன் ஆரணங் கென்றலின் -------" (அகம். 98)

போன்ற பாடல் அடிகள் இதனைத் தெளிவுபடுத்தும்.

இவ்வாறு கட்டுப்பார்த்தலாலே இவள் கட்டுவிச்சி என்றும் அழைக்கப்பட்டாள். இவள் குறவர் குலப்பெண் ஆதலின் கொடிச்சி என்றும் பிற்காலத்தில் குறவஞ்சி என்றும் அடைக்கப்பட்டாள்.

## மலைவளம் பாடுதல்

சங்ககால அகவன் மகள் முதல் பிற்காலக் குறவஞ்சி வரை குறிகூறுவதற்கு முன் தெய்வங்களை அழைத்துப்பாடியதோடு மலைவளத்தையும் பாடியுள்ளனர். நானிலத்துள்ளும் குறிஞ்சி நிலம் இயற்கையிலேயே வளமானதும் அழகானதும் ஆகும். நானில மக்களுள்ளும் குறிஞ்சி நிலமக்கள் பழமையானவர்கள் குறவர் குலப்பெண் மலைநிலத்தின் வளமையைப் பாடுவதில் பெருமை கொண்டவளாக இருந்துள்ளாள்.

அகவன் மகளே அகவன் மகளே

மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்

அகவன் மகளே பாடுக பாட்டே

இன்னும் பாடுக பாட்டே அவர்

நன்னெங்குன்றம் பாடிய பாட்டே (குறுந். 23)

தோழி கூற்றாக வரும் இப்பாடல் அகவன்மகள் மலைவளம் பாடிய செய்தியை அறிவிக்கிறது.

தந்தை

மைபடு மால்வரை பாடினள் கொடிச்சி" (373)

என்ற நற்றிணை பாடலால் அகவன் மகள் கொடிச்சி என்றும் அழைக்கப்பட்டுள்ளாள் என்பதை அறியமுடிகிறது. கொடி போன்று அழகான பெண் என்பது பொருள். பிற்காலத்தில் குறவஞ்சி என்று அழைக்கப்பட்டமை இதனோடு சேர்த்து எண்ணத்தக்கது. வஞ்சி என்றால் கொடி. கொடி போன்ற அழகுடைய குறவர் குலப்பெண் என்னும் பொருள்பட பின்னாளில் குறவஞ்சி என்று அழைக்கப்பட்டாள். குறிகூறும் பணி செய்வர்கள் குறவர்குலப் பெண்களாகவே இருந்துள்ளனர் என்பதும் இவர்கள் மலைவளம் பாடினர் என்பதும் தெளிந்த உண்மை.

'அம்ம வாழி தோழி பன்மலர்

நறுந்தண் சோலை நாடுகொழு நெடுந்தகை

குன்றம் பாடான் ஆயின்

என் பயஞ் செய்யுமோ வேலற்கு அவ்வெறியே" ( ஐங். 244)

என்ற பாடல் வெறியாடல் நிகழ்த்தி, கழங்கு கொண்டு குறிசொல்லும் வேலனும் மலைவளம் பாடிய கூடுதல் செய்தியை தருகிறது.

அகவன் மகள் கூறிய பின்பு, அன்னை வேலனை அழைத்து வெளியாடல் நிகழ்த்துவாள். இது மையல் கொண்ட பெண்ணுக்குப் பெருந்துன்பம் விளைவிப்பதாகும்.

'மயங்கிய

மையற் பெண்டிற்கு நொவ்வல் ஆக

ஆடிய பின்னும் --------------------------" (அகம். 98)

என்கிறது அகநானூறு. இத்துன்பங்களைத் தவிர்பதற்காக, அகவன்மகள் தெய்வம் தொழுது மலைவளம் பாடும் போதே அறத்தொடு நிற்க முனைந்த தோழியை குறுந்தொகை (23) குறிப்பிடுகிறது. 'அவர் குன்றத்தை இன்னும் பாடுக" என்று அகவன் மகளிடம் கூறி 'யார் அந்த அவர்?" என்று செவிலித் தாய் கேட்பதற்கு இடம் செய்கின்றாள் தோழி. அதனைத் தொடர்ந்து அறத்தொடு நின்று தலைவிக்கு வரவிருக்கும் அடுத்தடுத்த துன்பங்களை நீங்கி வரைவுக்கு வழி செய்ய முற்படுகின்றாள்.

## தீது மொழிதலும் நினைத்த குறியும்

அகவன் மகள் நெல்லை முறத்தில்இட்டு தலைவியை எதிர் அமர்த்தி தெய்வம் தொழுது மலைவளம் பாடி நெல்லை எண்ணிக் குறிகூறுகையில் அக்குறி தலைவியின் உடல் வேறுபாட்டுக்குக் காரணம் முருகணங்கு என்றோ வேறோர் அணங்கு என்றோ இருக்குமே யன்றி சங்க இலக்கியத்தில் எந்த அகவன் மகளும் தலைவியின் இவ்வேறுபாடு தலைவனால் வந்ததென்று சொன்னதாகப் பதிவு இல்லை. இதனாலேயே பொய்வல் பெண்டிர் (அகம். 98) என்றும் தீது மொழிந்தனள் (குறுந். 26) என்றும் தோழி குறிப்பிடுவதாகச் சங்க இலக்கியத்துள் காணமுடிகிறது. பேசிப்பேசியே முதிர்ந்த வாயினை உடையவரான பொய் கூறுவதில் வல்ல அகவன்மகள் தலைவியின் மாறுபாட்டுக்குக் காரணம் முருகணங்கு என்று குறி கூறினாள் என்றும் (அகம். 98) அம்லை நாட்டின் மலையில் வாழும் குரங்கு அறிந்த உண்மையைக் கூட (தலைவியின் காதல்) முருகணங்கு அறியவில்லையே (குறுந். 6) எனும் பொருள் தோன்றவும் தோழி வருந்தி உரைக்கக் - அறத்தொடு நிற்கக் காணமுடிகிறது.

இத்தகைய குறியானது தலைவன் தலைவி காதலைக் குறைத்து மதிப்பிடுவதாயும் தலைவியின் கற்பைக் காயப்படுத்துவதாகவும் எண்ணி வருந்தும் தலைவியையும் தோழியையும் சங்கப்பாடல் பதிவு செய்யதுள்ளது.

'தான் உற்ற நோய்க்குப் பிற காரணங்களைக் கூறுகிறார்கள். இதனைத் தலைவன் கேட்பின் யான் உயிர் வாழ்தல் அரிது" என்று தலைவி துன்புறுகின்றாள்.

'செறிதொடி உற்ற செல்லலும் பிறிது எனக்

கான்கெழு நாடன் கேட்பின்

யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிது" (அகம். 98)

தலைவர் மேல் கொண்ட வேட்கை மிகுதியாலும் பிரிவு காரணமாயும் துன்புற்று உடல் மாறுபட்ட தலைவி பற்றி அகவன் மகள் அன்னையிடம் கூறிய குறி தலைவிக்கும் தோழிக்கும் பெருந்துன்பமாய் இருக்க, பிற்காலத்துக் குறவஞ்சிக் குறத்தியோ நினைத்த குறி சொல்லும் பெண்ணாகவே காணப்படுகிறாள். எல்லா குறவஞ்சி சிற்றிலக்கியத்திலும் நீ நினைத்தது நடக்கும்" என்று கூறினாளேயன்றி மாறி உரைத்தவள் இல்லை. நல்லெண்ணம் விதைத்து நம்பிக்கையூட்டக் கூடியவனாகவும் நேர் முகச் சிந்தனை உள்ளவளாகவும் படைக்கப்பட்டவள் குறவஞ்சி.

முந்நாழி முச்சிறங்கை நெல்லளிந்து கொண்டுவா
முறத்திலொரு படிநெல்லை முன்னேவை அம்மே
இந்நாழி நெல்லையும் முக்கூறுசெய்து ஓர்கூற்றை
இரட்டைபட எண்ணினபோது ஒற்றைபட்ட தம்மே
உன்னாமுன் வேள்விமலைப் பிள்ளையார் வந்துதித்தார்
உனக்கினி எண்ணின கருமம் இமைப்பினில் கைகூடும்
என்ஆணை யெங்கள் குலக் கன்னிமார் அறிய
எக்குறிதப்பினும் தப்பாது இக்குறிகாண் அம்மே (மீனாட்சியம்மை குறம்.26)

## பக்தி இலக்கியத்தில் குறி

சைவ வைணவ சமயங்கள் தம்முள் ஒன்றுபட்டு மறுமலர்ச்சி கண்டு பின்னர் தனித்து நின்று வளர்ச்சி கண்டவை. இவ்விரு சமய இலக்கியங்களிலும் நாயக நாயகி பாவத்தில் பாடப்பட்ட பாடல்களில் கட்டு விச்சி குறிகூறும் பாடல்கள் காணப்படுகின்றன.

குறவஞ்சி நினைத்த குறி சொன்னதனால் தலைவியும் தோழியும் பெருமகிவு எய்துகின்றனர். தலைவி அழகிய அணிகலன்களைக் குறத்திக்குப் பரிசளித்துள்ளாள். சிறிய திருமடலில், கட்டுவிச்சி சடுதியில் உண்மை உணர்ந்து நினைத்த குறி சொன்னதாகப் பதிவு செய்கிறது.

'கட்டுவிச்சி கட்டேறிச்
சீரார் சுளகிற் சிலநெல் பிடித்தெறியா
வேரா விதிர்விதிரா மெய்சிலிராக் கைமோவாய்ப்
பேராயிர முடையான் என்றாள்" (சிறிய திருமடல் 20-22)

கட்டு விச்சி குறிகூறத் தொடங்கி சுளகில் சில நெல் பிடித்து எண்ணும் முன்னே வியர்த்து விதிர்விதிர்த்துப் போய் மெய் சிலிர்த்துத் தன் கையை மோவாயிலே வைத்து வியப்புடனே ஆயிரம் பெயர்களை உடையவனாகிய விஷ்ணுவே தலைவியின் உளம் புகுந்தவன் என்று கூறுகின்றாள்.

திருக்கோவையாரின் கட்டுவைப்பித்தல், கலக்கமுற்று நிற்றல், கட்டுவித்தி கூறல் எனும் துறைகளுக்குரிய செய்யுட்களும் அவற்றின் உரைகளும் கட்டு- குறிகூறுதல் பற்றிய செய்திகளைக் கூறுகின்றன.

இதுகாண்மின் அன்னைமீர்
இக்கட்டுவிச்சி சொற்கொண்டு நீர்
எதுவானுஞ் செய்தங்கோர்
கள்ளும் இறைச்சியும் தூவேன்மின் (4:6:3)

என்ற பாடலில் "கட்டுவிச்சியின் மொழியை நம்பி வெறியாடலுக்கு வகை செய்யாதீர்; வெளியாடு களம் சமைத்து அங்கு கள்ளும் இறைச்சியும் தூவாதீர்" என்றது சைவ சமயத்தின் பாற்பட்ட முருகணங்கை வழிபடுதலில் உடன்பாடின்றியேயாம். அதன் பொருட்டாக இக்கட்டுவிச்சி கூறுதல் உண்மையன்று என்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதிலும் குறிகேட்டுள்ளனர் என்ற செய்தி பெறப்படுகிறது.

## புறப்பொருள் குறி

குறி கூறுதலில் அகம் சார்ந்த குறிப்புகள், பாடல்கள் சங்க இலக்கியத்துள்ளும் அதைத் தொடர்ந்து குறவஞ்சி சிற்றிலக்கியம் வரையிலும் காணப்பட்டாலும் மன்னன் அவர்க்குப் பரிசு வழங்கியதாகவும் மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

'நாள் ஈண்டிய நல் அகவர்க்குத்
தேரொடு மா சிதறி ------- " (223 - 224)

அகவன் மகளிர்க்கும், அகவுனர்க்கும் மன்னன் பரிசளித்தை அக இலக்கியங்களும் பதிவு செய்துள்ளன. இப்பரிசில் அகவன் மகள் மன்னனுக்கு நல்லகுறி சொன்னதற்காக இருக்கலாம்.

'அன் கடுங்கள்ளின் அகுதை பின்றை

அகவன் மகளிர்

மடப்பிடி பரிசில் மான------" (குறுந். 295)

'அகவுநர்ப் புரந்த அன்பின்--------" (அகம். 11)

'----------- அகவுநர் வேண்டின் வெண்கோட்டு

அண்ணல் யானை ஈயும் வண் மகிழ்

வளியன் வேண்மான் ஆஅய் எயினன்" (அகம். 208)

போன்ற பாடல் அடிகள் அகவன் மகளிர்க்கு மன்னன் பெரும்பரிசில் நல்கியதைக் குறிப்பிடுகின்றன.

## மாத்திரைக்கோல்

சங்ககால அகவன் மகளும் குறவஞ்சியும் இருவருமே கையில் சிறிய கோல் ஒன்றை வைத்திருந்துள்ளனர். நுனியில் வெண்ணிறம் உடையதாய் இருந்துள்ளது.

'வெண்கடைச் சிறுகோல் அகவன் மகளிர்" - குறுந் - 298

'இருங்கழை இறும்பின் ஆய்ந்துகொண்டு அறுத்த

நுணங்குகண் சிறுகோல் வணங்கிறை மகளிரொடு" (அகம் 97:9-10)

'நுண்கோல் அகவுநர் வேண்டின் ------------" (அகம் 208)

'----------------------- மாத்திரைக் கோல்

ஏந்தி மணிக்கூடை தாங்கி" (திருக்குற்றாலக்குறவஞ்சி 3-5)

போன்ற பதிவுகள் அகவன் மகளிர் முதல் குறவஞ்சிவரை கையில் சிறுகோல் வைத்திருந்தனார் என்று அக்கோல் மாத்திரைக் கோல் என்றும் குறிப்பிடுகின்றன.

குறவஞ்சி சிற்றிலக்கிய அமைப்பு

கட்டியங்காரன் கடவுளோ வள்ளளோ பவனி வருவதை அறிவிப்பான்

இளம் பெண் ஒருத்தி காதல் கொள்வாள்

குறத்தி வருகை

குறிகூறல் - நினைத்தகுறி

தலைவி மனம் மகிழ்ந்து பரிசில் தருவது

குறத்தியைத் தேடி சிங்கன் - குறவன் வருதல் அவர்கள் உரையாடுதல்

இருவரும் பாட்டுடைத் தலைவனைப் போற்றுவர்

அகவன் மகள்

- தலைவன் - தலைவி காதல்
- வேட்கை, வரைவு நீட்டித் தவிடத்து உடல் மெலிதல், சோர்தல்
- நற்றாய் செவிலித்தாய் குறி கேட்டல்
- குறிகேட்க ஆரம்பித்த போது அறத்தொடு நின்றது (அல்லது) தோழி குறியறிவுறீஇ வரைவு கடாயது
- வேறொரு தெய்வம் என்றலும் கலங்கல்
- தலைவன் அது கேட்டால் தான் உயிர் வாழ்தல் அரிது எனத் தலைவி வருந்துதல்.

இலக்கியங்களில் மட்டுமல்லாது இன்றளவும் கடற்கரைப் பகுதிகளிலும் கிராமங்களிலும் குறத்தி கூறி கூறுவதைக் காணலாம். மன்னர்களிடம் மிகப் பெரும்பரிசில் பெற்ற இக்குறி கூறும் பெண்கள் வாழ்க்கை தற்காலத்தில் மிகவும் நலிவடைந்து காணப்படுகிறது. ஆன்மிக நாட்டம் குறைந்து அறிவியல் பெரு வளர்ச்சி கண்டுள்ள இக்காலத்தில் குறி கேட்டல் அருகிவிட்டது.

குறவஞ்சி நாடகத்தின் இறுதிப் பகுதியான சிங்கன் சிங்கி பாட்டுடைத் தலைவனைப் போற்றிப் பாடி மகிழும் சாட்சியின் நீட்சியாக இன்றளவும் குறவன் குறத்தி நடனம் மேடைகளிலும் திரைப்பாடல்களிலும் இடம் பெறுகின்றன.

## References

உ.வே.சாமிநாதையர் உரை. குறுந்தொகை. திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை. அகநானூறு. திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

சுப்பிரமணியன், ந. (1978) சங்ககால வாழ்வியல். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

வையாபுரிப்பிள்ளை, ச. (1956) இலக்கிய வரலாறு. கழக வெளியீடு.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License